றிக்கோ'கோப்பியை
அரைத்து
பெற்றுக்கொள்ளவும்
நூடில்ஸ் வகைகளை
ஓடர் செய்து
பெற்றுக் கொள்ளவும்
றிக்கோ
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00


ஐஸ்கிறீம் வகைகள்
பாலுத்தா சர்பத்
பொம்பே கவீற்ஸ்
கோழி புரியாணிக்கும்
றிக்கோ
சுவீற்ஸ் அன் கிறீம்
ஹவுஸ்
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 27 சனிக்கிழமை (09 - 04 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 133

## போராட்டத்தின் உயரிய நோக்கை மாணவ சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்

# கல்வி உட்பட சமூகஅமைப்புகளை உயர் நிலைக்கு நகர்த்திச் செல்ல சுயநிர்ணய உரிமை அவசியம்

## பொ. க. தேர்வு பரிசளிப்பில் தேசிய தலைவர் பிரபா செய்தி



யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

கல்வி உட்பட சகல சமூக அமைப்புகளையும் ஓர் உன்னதமான வளர்ச்சிப் போக்கில் உயர் நிலைக்கு நகர்த்திச் செல்வதாயின், நாம் சுதந்திர மனிதர்களாக, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருக்கவேண்டும்;

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் கூடுதல் புள்ளிகளைப் பெற்று சிறப்பாகத் தேறிய மாணவர்களுக்கு பரிசில்களையும், பாராட்டுதல்களையும் வழங்கி விடுத்த பாராட்டுச் செய்தியில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மிகவும் நவீனமான தொழில்நுட்ப யுகத்தை நோக்கி இன்றைய உலகம் நகர்ந்து கொண்டிருக்கிறது. அறிவியலும், தொழில்நுட்பமும், அபார வளர்ச்சிகண்டு உலகத்தின் வளர்ச்சிப் போக்கில் புரட்சிகரமான மாற்றத்தை நிகழ்த்தி வருகின்றன. இந்த வளர்ச்சிப் போக்கின் தாக்கத்தினால், முன்னேறிய நாடுகளின், சமூக பொருண்மிய வாழ்வும், பிரமிக்கத்தக்கவகையில் மாற்றங் கண்டு வருகிறது. இந்தப்புதிய யுகத்தின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், அடித்தளமாக விளங்குவது அறிவியல், தொழில்நுட்பக் கல்வியாகும்.

அறிவுசார் கல்வியின் வளர்ச்சியால், மாறிவரும் உலக சமூகத்துடன் ஒப்புநோக்குகையில், எமது தேசத்தின் கல்வி நிலை, மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. இதற்குப் பிரதான காரணி, சிங்கள இனவாத அரச ஒடுக்குமுறையாகும். இந்த ஒடுக்குமுறை எமது தேசத்தின் ஆற்றலையும், சக்தியையும் முடக்கி வைத்திருக்கிறது.

அரசின் கல்வி அழிப்புக் கொள்கை

எமது தேசிய வாழ்விற்கு, ஆதாரமாக விளங்கும் கல்வித் துறையைச் சிதைத்துவிடச், சிங்களப் பேரினவாதம் நீண்ட காலமாகவே முனைந்துவருகிறது. சிங்கள மொழித் திணிப்பில் தொடங்கி, தரப்படுத்தல் என்றும், வெட்டுப்புள்ளி என்றும், காலத்திற்குக் காலம் தமிழரின் கல்வியைச் சீர்குலைப்பதற்குத் திட்டமிட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில், இந்த கல்வி அழிப்புக் கொள்கை மிகவும் நுட்பமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இப்படியான அரச ஒடுக்குமுறையின் நெருக்குதல்கள் காரணமாக, எமது கல்வித்துறை என்று

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## சிறப்பாக நடந்த பரிசளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம், ஏப். 9

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை நடந்த வருடம் நடத்திய தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் அதிசிறப்பாக தேறிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவம் நேற்று மாலை யாழ். இந்துக் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது.

இந்துக் கல்லூரியில் இருந்து பாண்ட் வாத்திய இசையுடன் மாணவர்களின் அணிவகுப்புடன் கௌரவ விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் தேசியக்கொடி ஏற்றினார்.

யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினம் சுடரை ஏற்றினார்.

அதைத் தொடர்ந்து பேரவையின் தலைவர் வண. பிரான்ஸிஸ் யோசேவ் தலைமையில் பரிசளிப்பு விழா நடந்தது.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தமிழீழ தேசியத் தலைவரும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருமான திரு. வே. பிரபாகரனின் வாழ்த்துச் செய்தியை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் வாசித்தார்.

தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் கல்விக்கழக அறிக்கையை வாசித்தார்.

யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினம், யாழ். கல்வி வலயம் 1 பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி, யாழ் கல்வி வலயம் 11 பிரதி

( 5 ஆம் பக்கம் பார்க்க )

# போரில், சமாதானத்தில் பலமான நிலையில் புலிகள்

## பரிசளிப்பு விழாவில் அன்ரன்பாலசிங்கம்



யாழ்ப்பாணம், ஏப். 9

தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும், சிங்கள மக்களும், உலகமும் சமாதானத்தை விரும்புகிறார்கள், சிங்கள ஆட்சி பீடம் தான் சமாதானத்தை விரும்பவில்லை. மாறி, மாறி மண்கிண்டிமலை, கிளாலி, பூநகரி ஆகிய இடங்களில் அரச படைகளுக்கு ஏற்பட்ட படு தோல்விகள், இராணுவ இழப்புகள், தென் மாகாணத்தில் ஏற்பட்ட தோல்வி, ஆகியவற்றாலேயே பேச்சுவார்த்தைக்கு வர சிங்கள ஆட்சி பீடம் மறுக்கிறது. யுத்தத்திலும், சமாதானத்திலும் சமமான நிலையில் புலிகள் இருக்கிறார்கள்.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நேற்று மாலை நடந்த பரிசளிப்பு விழாவில் கலந்து சிறப்புரையாற்றுகையில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசியதாவது:-

இன்றைய நிலையில் புலிகளுக்கு நேசக்கரம் நீட்டினால் இராணுவக் கட்டமைப்பு உடையும், இராணுவத்தின் கோரிக்கைக்கு அடிபணிய வேண்டிவரும் என்று சிங்கள ஆட்சி பீடம் கருதுகிறது. இதனால் தான் புலிகளை அழிக்க வேண்டும். நாட்டைக் காக்க வேண்டும் என்று இராணுவத்துக்காக ஆட்சி பீடம் கோரி வருகிறது.

## பேச்சுக்கு அரசு தயார் என்றால் தாயகத்தை அங்கீகரிக்கட்டும்

அரசு பேச்சுக்கு தயார் என்றால், நாம் எமது அடிப்படைக் கோரிக்கையான தாயகத்தை அங்கீகரிக்கக் கோருவோம்.

புலிகள் இயக்கம் ஆரம்பிக்க முன்னர் தமிழ் தலைவர்கள் பண்டாசெல்வா ஒப்பந்தத்தில் கோரிய தாயகத்தை அங்கீகரிக்க கோருவோம் என்று அரசுக்கு தெரியும்.

30 ஆண்டு காலமாக தாயகக் கோட்பாட்டுக்காக தமிழ் மக்கள் போராடுகிறார்கள். இணைப்பு ஒன்றில்லை என்பதை தெரிவிப்போம்.

40 ஆயிரம் உயிர்களையும், ஆறாயிரம் போராளிகளின் தியாகத்தையும், கோடிக்கணக்கான உடைமைகளையும் இழந்துவிட்டு எமது அடிப்படை தாயகக் கோட்பாட்டை விட்டுக் கொடுப்பதா? இவ்விடயத்தில் விடுதலைப்புலிகள் உறுதியாக இருக்கிறார்கள்.

## தெற்கில் இனவாதம் வீழ்கிறது

தெற்கில் இனவாதம் இன்று வீழ்கிறது.

கிழட்டு ஜே. ஆர். நடக்க முடியாதவாறு தாவேரின் உதவியுடன் திரியும் சிறிமாவோ அம்மையார், அறளை பேர்ந்த டிங்கிரி பண்டா இவர்கள் வயோதிப மடத்தில் இருக்க வேண்டியவர். இவர்கள் தான் அரசியல் நடத்துகிறார்கள்.

யாழ்ப்பாணம் வந்த சிங்கள பத்திரிகையாளர்கள் குழுவிடம், "சமாதானம் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். கிழட்டு ஜனாதிபதி பயங்கரவாதத்தை ஒழிக்கப் போவதாக அறிக்கை விடுகிறாரே" என்று கேட்டேன்.

அவர் ஒரு 'கோமாளி' என்று அந்த பத்திரிகையாளர் கூறினார்.

இந்தக் 'கோமாளி' தான் சிங்கள தேசத்தின் ஜனாதிபதி, முப்படைகளின் தளபதி இந்த கோமாளியின் கையிலா எமது மக்களின் உயிர்கள்?

## ஐ.தே.க. பெரும் நெருக்கடியில்

ஐ.தே.க தற்போது பெரும் நெருக்கடியில் உள்ளது. 6 மாதகாலத்தில் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவற்றை நடத்த வேண்டும்.

இப்போது நாம் இவர்களுடன் பேச்சு நடத்த, 6 மாதத்தில் இவர்கள் இல்லாமல் போனால்—புதிய அரசு வந்தால்—எமது பேச்சின் பலன் என்ன?

இரு வித கேள்வி ஐ. தே. க வில் இன்று உள்ளது.

ஒன்று, சமாதானத்தை நிலையை உருவாக்கி தேர்தலை நடத்துவது. மற்றது

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீச்சில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 9

பலாலி ராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை தெல்லிப்பளையை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் போது, தெல்லிப்பளை சித்திய தம்பதிப் பகுதியில் அண்ணாமலை உமாச்சந்திரன் (வயது 24) என்பவர் காயமடைந்தார். (இ-17-ஏ)

### முச்சந்தி முரளி



தொண்டா என்ன நேரத்துக்கு ஒரு கதை விடுகிறார்......!

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 9

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் ... விடுதலைப் புலிகளின் அரசியல் ... ளார். (உ-8)

## 3 படையினர் திருமலையில் பலி

யாழ்ப்பாணம், ஏப். 9

திருகோணமலை கும்புறுப்பிட்டியில் ஸ்ரீலங்கா இராணுவ காவலரண் ஒன்றை விடுதலைப் புலிகள் வாகனத்தில் சென்று தாக்கியதில் குறைந்தது 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

கும்புறுப்பிட்டியில் 15 ஆம் கட்டை இராணுவ முகாமில் இருந்து 250 யார் தூரத்தில் அமைந்துள்ள காவலரணே தாக்கப்பட்டது.

நேற்றுக் காலை 7.40 மணியளவில் இடம்பெற்ற இந்த ஒரு நிமிட தாக்குதலில் குறைந்தது 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர்.

இத்தாக்குதலின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ரியூட்டரி மீதான கட்டுப்பாடு நீக்கத் தலைவர் தயார்

யாழ்ப்பாணம், ஏப். 9

கல்விநிலை வீழ்ச்சிக்கு தனியார் கல்வி நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும் காரணம் என்று தற்போது கருத்து நிலவுகிறது. இந்தக் கருத்தை நாம் உதாசீனம் செய்யவில்லை.... இந்த விடயம் தலைவர் பிரபாகரனின் கவனத்துக்கு தற்போது உள்ளது. இதபற்றி ஆராய்கிறோம். உண்மையில் கல்வி வீழ்ச்சிக்கு இக் கட்டுப்பாடுகளும் காரணம் என்றால் தலைவர் அதை நீக்கத்தயார்.

இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்.

யாழ். இந்துக் கல்லூரியில் நேற்று நடந்த பரிசளிப்பு விழாவில் பேசுகையில் அவர் இத்தகவலை வெளியிட்டார். (இ-3)

## அச்சுவேலியில் நேற்று இரவு ஷெல்லுக்கு 3 பெண்கள் பலி

பலாலி இராணுவ முகாமில் இருந்து அச்சுவேலிப்பகுதியை நோக்கி நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட ஷெல்தாக்குதலின் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் பலியானார்கள். இவர்களின் வீடும் முற்றாக சேதமடைந்தது.

அச்சுவேலியைச் சேர்ந்த சிவலிங்கமூர்த்தி பேரின்பநாயகி (வயது 54), அவரது சகோதரி வேலுப்பிள்ளை சகுந்தலாதேவி (வயது 42) பேரின்பநாயகியின் மகளான சிவலிங்கமூர்த்தி சிவசுதர்சினி (வயது 19) ஆகியோரே இம் மூவரும் ஆவார்.

சிவலிங்கமூர்த்தி சிவசுதர்சினி படுகாயமடைந்த நிலையில் யாழ். போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார் மற்றைய இருவரும் அதே இடத்தில் கொல்லப் பட்டனர். (இ-15)

## வழிப்பறி கொள்ளைகளுக்கு ஈழத்தமிழரே காரணமாம்

சென்னை, ஏப் 9

தமிழ்நாட்டில் சமீப காலமாக நெடுஞ்சாலைகளில் வழிப்பறிக் கொள்ளைகள் இடம்பெற்று வருவதற்குக் காரணம் இலங்கையில் இருந்து வந்துள்ள தமிழ் இளைஞர்கள் தான்.

முதலமைச்சர் ஜெயலலிதா தமிழக சட்டசபையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் திருப்பி அனுப்ப வேண்டும் என்று தாம் இந்திய மத்திய அரசைக் கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் நெடுஞ்சாலைகளில் திருட்டு, கொள்ளைச் சம்பவங்கள் பரவலாக இடம் பெறுவது குறித்து எதிரணி எம். எல். ஏக்கள் கவன ஈர்ப்புப் பிரேரணை கொண்டுவந்த போது முதலமைச்சர் இத்தகவல்களை தெரிவித்தார். [இ·எ]

## அரசுக்கு ஆதரவு அளிப்பதில்லை

### இ. தொ. கா. முடிவு

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவினால் அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் செயற்படுத்தப்படும் வரை தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எவ்வித ஆதரவையும் வழங்குவது இல்லை.

இப்படி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி வழங்குதல், வீடுகளுக்கு உரிமம் வழங்குதல், ஊதிய உயர்வு உட்பட பல்வேறு நிவாரணங்களை வழங்குவது சம்பந்தமாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா உறுதியளித்திருந்தார் என்றும் அவை அமுலாக்கப்படும் வரை அரசுக்கு ஆதரவு வழங்கப்படலாகாது என்ற முடிவுக்கு இ. தொ. கா வந்திருப்பதாகவும் காங்கிரஸின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். [இ-எ-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NEW MASTER INSTITUTE
B.M.C. LANE, JAFFNA

**96 - A/L**

**விஞ்ஞான, கணித வகுப்புகள்**

**ஆரம்பம்: 10 - 04 - 94**

PHY. — திரு. வர்ணம்
CHE. — திரு. தில்லை
BOT. — திரு. நேசன்
ZOO. — திரு. செங்காதரன்
MATHS — திரு. கிருஷ்ணா

நேர அட்டவணையை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(சி-7806)

---

காரைநகர் — மணற்காடு
ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அன்னையின்
**தேர் உற்சவ தினம்**
1994 — 04 — 09 சனிக்கிழமை (இன்று)

**"உன்னால் இங்கு வாழ்கின்றோம்"**

எம்மால் தாங்க முடியாத
எத்தனை துன்பம் இருந்தாலும்
உம்மால் இங்கு வாழ்கின்றோம்
உன்னைப் பணிந்து வாழ்வதனால்
அம்மா மணற்காடுறைபவளே
அன்னை தாயே ஆட்கொள்வாய்
இம்மா நிலத்தே எம்மையெல்லாம்
ஏற்றே அருள்வாய் எப்பொழுதும்.

- கவிஞர் காரை எம்.பி. அருளானந்தன்.

(30317)

---

## குகன்
**கல்வி நிறுவனம்**
ஆவரங்கால்.

**O/L DAY CLASS**
ஆரம்பம்:
**09.04.1994**
சனி பிற்பகல்
**4 00 மணி**

[30326]

---

## SCIENCE COLLEGE
பெருமாள் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

**A/L 96**

CHE:
திரு. மகாதேவா
B.Sc. [Cey] Dip.in Ed
PURE, APP, திரு. குணசிங்கம்
B Sc. [Hons]
ZOO:
திரு. ஈஸ்வரதாசன்
B Sc (Cey) Dip.in Ed.
BOT:
திரு. செல்வநேசன்
PHY:
திரு. ரவீந்திரநாதன்
B.Sc.(Cey) Dip. in Ed.
திரு. சூரியநாதன்
B.Sc [Hon] Dip.in Ed

[சி/7721]

---

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்"

**யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின்**

**36 ஆவது ஆண்டு**

## தமிழ் இசை விழா

இடம்: நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு விநாயகர் ஆலய முன்றில்

காலம்: **01 - 04 - 1994** முதல் **15 - 04 - 1994** வரை

09 — 04 — 1994 சனிக்கிழமை

**ஒன்பதாம் நாள் நிகழ்ச்சிகள்**

மாலை 7-00 மணி

அ. இ. த. ம. மாணவிகள்
திரு. R. S. கேசவன் மாணவிகள் ]— வயலின்

7-45—9-15 மணி

திரு. பொன். வாமதேவன் — பாட்டு
திரு. உ. இராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. M. சிதம்பரநாதன் — மிருதங்கம்
திரு. V. தபோதநாயகம் — கடம்

வாழ்த்துவோர்:
**ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்**

(சி/7656)

---

நூலக வளர்ச்சிக்கான
**நிதியுதவி நிகழ்ச்சிகள்**
**பிற்போடப்பட்டுள்ளன**

பருத்திநகர் பெருந்திறல்ச்சான்றோன்
எம். துரைரத்தினமும் அவர்களின்
மாணவர்களும் வழங்கும்
வீரதீரச் செயல்கள்

குறிப்பு:
யா/வட்டு-இந்துக்கல்லூரியில் 09-04.1994 சனிக்கிழமை நடைபெறவிருந்த இந் நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் 14-05—1994 சனிக்கிழமை நடைபெறும்.

விளம்பர அன்பளிப்பு:

யாழ். நகரில் புதுவருடத்தை முன்னிட்டு
பாட்டா, டி. எஸ். ஐ. பாதணிகள்
மலிவு விற்பனை
**நாதன்ஸ்**
17, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(30276)

---

## சீமாட்டி
(புடைவை அகம்)

மலிவு விற்பனை

புத்தாண்டை முன்னிட்டு அனைத்து
புடைவை ரகங்களும் மலிவு விற்பனையில்

**சீமாட்டி புடைவை அகம்**

இம்மாதம் 14ஆம் திகதி வரையில்
இம் மலிவு விற்பனை தொடரும்!

இன்றே நாடுங்கள்:

**சீமாட்டி**
**புடைவை அகம்**
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7812)

---

## ஹோம் நீட்ஸ்

பழைய, புதிய தளபாடங்கள்
வாங்க, விற்க
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
**ஹோம் நீட்ஸ்,**
யாழ்ப்பாணம்.

(30293)

---

## நன்றியுடன் நினைவு கூருகின்றோம்

மலர்வு: 18 — 06 — 1918



உதிர்வு: 09 — 04 — 1990

அமரர்
**உவில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா**
[இளைப்பாறிய அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை]

"நான் கர்த்தருடைய வீட்டில்
நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்"
சங். 23:6

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி,
மைத்துனர்.

யாழ்ப்பாண வீதி,
மானிப்பாய்.

[சி-7816]

---

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் பங்குனி மாதம் 29ஆம் நாள் 11-04-94 திங்கட்கிழமை காலை 9-00மணிமுதல் 10-30 மணிவரையுள்ள சுபவேளையில்

S. சண்முகநாதன் நேசமணி
அவர்களின்
திருநிறை செல்வன்
**ச. குமரேசன்**
அவர்களுக்கும்

பொ. கந்தசாமி நேசம்மா
அவர்களின்
திருநிறை, செல்வி
**க. ஜெயந்திமலர்**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் கொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்,

S. சண்முகநாதன் நேசமணி,
குடும்பத்தினர்.
சங்கானை.

பொ. கந்தசாமி நேசம்மா
குடும்பத்தினர்.
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(7199)

---

## கலை வர்த்தகக் கல்லூரி
**C. C. A.**
(வெலிங்டன் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

**கலை வர்த்தக வகுப்புக்கள்**

**G.C.E.(A/L)96**

ஆரம்பம்: **09 - 04 - 1994**
காலை 8 மணி

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | திரு. உதயன் |
| கணக்கியல் | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | திரு. இரட்ணம் |
| அளவையியல் | திரு. சயந்தன் |
| இந்து நாகரிகம், இந்து சமயம் | திரு. ஜோதீஸ்வரன் |
| புவியியல் | திரு. வேலா |
| தமிழ் | திரு. தங்கராஜா |
| அரசியல் | திரு. பஞ்சு |
| கிறீஸ்தவ நாகரிகம் | திரு. நோபேட் |

குறிப்புக்கள்,

1. மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதால் முற்கூட்டியே [illegible] பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்.
2. மாதாந்த பரீட்சை [illegible] மாணவர் திறமை மதிப்பீடு செய்து வழிநடத்தப்படும்.
3. நேர அட்டவணைகளை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி

(சி-7500)

---

## அந்தியேட்டி அழைப்பு

பிறப்பு: 21 — 03 — 1920



இறப்பு: 10 — 03 — 1994

**திருமதி பரமநாதன் அன்னலட்சுமி**

எங்கள் அன்புத்தாய் திருமதி பரமநாதன் அன்னலட்சுமி அவர்களின் அந்தியேட்டி இன்று (09-04-1994) சனிக்கிழமை நடைபெறும். வசதிக் குறைவால் மரணச் சடங்கில் கலந்து கொள்ள முடியாமல் போனவர்களும் சுற்றத்தார், அன்பர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மகள்: திருமதி ப. கனகலிங்கம்,
(ஆசிரியை கனகரத்தினம் - ம. ம. வி., யாழ்ப்பாணம்)
மகன்: திரு. ப. நல்லநாதன்.
(தொழில் நுட்ப உத்தியோகத்தர், சமுகசேவைகள் [illegible])

3/1 பாரதி வீதி,
கச்சேரி நல்லூர் [illegible]
யாழ்ப்பாணம்.

(30314)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L DAY, EVENING SAT. - SUN CLASSES**

**எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:**

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் திரு J. R. சூரி | கணிதம் திரு. ஜெகன் | வரலாறும் சமூகக்கல்வியும் திரு. கோபி |
| ஆங்கிலம் திரு விஸ்வநாதன் | தமிழ் திரு. சிவா திருப்பதி | சமயம் திரு. கெங்கா சங்கர்; வர்த்தகம் திரு. கருணாகரன் |

| DAY CLASSES | EVENING CLASSES | SAT. - SUN CLASSES |
|---|---|---|
| (8-30 — 2-00) | (3-15 — 6-10) | (8-00 — 2-00) |
| ஆரம்பம்: | ஆரம்பம்: | ஆரம்பம்: |
| 11-04-94 | 11 04-94 | 10-04-94 |
| திங்கள் காலை 8-30 மணி | திங்கள் மாலை 3-15 மணி | ஞாயிறு காலை 8 மணி |

o அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

[சி-7817]

---

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
**ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவித்தல்**

10-04-1994இல் நடைபெறவிருந்த எமது வருடாந்தப் பொதுக்கூட்டம் 24-05-94 செவ்வாய்க்கிழமை காலை 9-00மணிக்குப் பின்போடப்பட்டுள்ளது.

இம்மாத இறுதிக்குள் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளும்படி, அங்கத்தவர்களை வேண்டுகிறேன்.

சோ. பத்மநாதன்.
செயலாளர்.

வாசாலை வீதி,
திருநெல்வேலி.

(30313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L 96 விஞ்ஞானப் பிரிவு

(கணித, உயிரியற் பிரிவு)

ஆரம்பம்:- 14-04-1994
(வியாழன் பிற்பகல் 3 மணி)

முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

NATURE — ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

UNIVERSAL — கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.

[இ/7484]



# திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்,

## A/L 1996
## கலை, வர்த்தகம்

பொருளியல் — திரு. உதயன்
கணக்கியல் — திரு. ஸ்ரீ
வர்த்தகம் — திரு. தேவா
அளவையியல் — திரு. எஸ். எஸ். மனோகரன்
இந்துநாகரிகம், இந்துசமயம் — திரு. சோதி
தமிழ் — திரு. குழந்தை
புவியியல் — திரு. வேலா
நாடகமும், அரங்கும் — திரு. சத்தியா

ஆரம்பம்: 09-04-1994
சனி

குறிப்பு:
குறிப்பிட்ட 200 மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும் என்பதால் அனுமதியினை உடன் உறுதிப்படுத்தவும்.

— நிர்வாகி.

[இ-7691]



# TACEP - 93
## சான்றிதழ் வழங்கல்

நாள்: 10 – 04 – 1994 ஞாயிறு
பிற்பகல் 3-45

இடம்: பலாலி ஆசிரிய கலாசாலை

மாணவர்களுக்குத் தனிப்பட்ட அழைப்பில்லை.

சோ. பத்மநாதன்,
மாநில இணைப்பாளர்.

[30289]



# நீங்காத நினைவுகளுடன்
## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி விஜயலட்சுமி கனகராஜா

தோற்றம்: 31 – 10 – 1936
மறைவு: 10 – 03 – 1994

எங்கள் அன்பின் திருவுருவாய்
அறிவின் ஒளிவிளக்காய்
பண்பின் இருப்பிடமாய்
பாசமிகு துணைவியாய், அன்னையாய்
மாமியாய், பாட்டியாய், மருமகளாய்,
சகோதரியாய், சிறியதாயாய், பெரியதாயாய்
இருந்த எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் பிரிவுத் துயர் தாங்காது தவிக்கிறோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

— அன்புக் குடும்பத்தினர்.

"சாந்தகம்"
பொற்பதி றோட்,
கொகுவில் கிழக்கு.

(30306)



# SPECIAL SINHALA CLASSES

1. அரச ஊழியர்கள், வைத்தியர்களுக்கான ORAL வகுப்புகள்
2. Spoken Sinhala
3. G. C. E. (O/L) இரண்டாம் மொழியாக தோற்ற இருக்கும் மாணவர்களுக்கு
4. பல்கலைக்கழக மாணவர்களுக்கு வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம்: 16 - 04 - 1994
SAT. 12- 00 Noon

ஆசிரியர்: MR. PIYADASA

பெயர்களை முன் கூட்டியே பதிவு செய்யவும்.
மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

"A" LEVEL CENTRE
1St. LANE, POINT - PEDRO ROAD,
JAFFNA.

(இ-7718)


# உட்கட்சிப் பூசலைத் தீர்த்து வைக்க ஜே. ஆர். தயாராம்!

## அழைத்தால் மத்தியஸ்தம் வகிப்பேன் என்கிறார் அவர்

கொழும்பு, ஏப். 9

அழைக்கப்படும் பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் நிலவும் உட்கட்சிப் பூசலைத் தீர்த்து வைப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்திருக்கிறார்.

'திவயின' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில்—

ஐக்கிய தேசியக் கட்சியில் நிலவும் எந்த நெருக்கடிக்கும் சமரசத் தீர்வு ஒன்றைக் காணுவதற்கு மத்தியஸ்தம் செய்வதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் திரு. ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

''ஒரு நிபந்தனை என்னிடம் மத்தியஸ்தம் செய்யச் சமர்ப்பிக்கப்படும் விஷயத்தின் தாரதம்மியம் பார்த்தே எனது தலையீடு இருக்கும்''— என்றும் அவர் கூறினார்.

பதவியில் இருந்த போது கட்சித் தலைவர் என்ற முறையில் தாம் தலையிட்டு பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டிருப்பதாகக் கூறிய திரு. ஜெயவர்த்தனா ''இப்போது நான் கட்சித் தலைவராக இல்லை எனவே அழைக்கப்படாது ஐக்கிய தேசியக்கட்சியின் உள்விவகாரங்களில் தலையிடுவது முறையானது''— என்றும் தெரிவித்தார். (ஒ-எ)

## உணவு முத்திரை பொருள்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப். 9

ஜூலை மாத மாணவர் மதிய உணவு முத்திரைக்கான விநியோகம் கடந்த வியாழக்கிழமை முதல் நடைபெறுவதாக சுன்னாகம் ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் உணவு முத்திரைக்கான பொருள்களை பெறுமாறும் —

விடுமுறை தினங்களான 10ஆம், 13ஆம் திகதிகளில் சகல கிளைகளும் திறந்திருக்கும் என்றும் — அவர் தெரிவித்துள்ளார். (இ-8)

## முதலாம் தவணை விடுமுறை

யாழ்ப்பாணம், ஏப். 9

அரசாங்க பாடசாலைகள் முதலாம் தவணை விடுமுறைக்காக நேற்று மூடப்பட்டன. மீண்டும் இம்மாதம் 26 ஆம் திகதி இரண்டாம் தவணை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-162)

## பொலிஸ் அதிகாரிக்கு திடீர் இடமாற்றம்

கொழும்பு, ஏப். 9

மினுவாங்கொட பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் குயின்ரஸ் ரேமண்ட் விசேட காரணங்களுக்காக திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் பிராங்க் டி சில்வா தெரிவித்திருக்கிறார்.

அவ்விசேட காரணங்கள் என்ன என்பதை வெளியிட பொலிஸ் மா அதிபர் மறுத்துவிட்டார். திரு. ரேமண்ட் கம்பஹா பொலிஸுக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். (த எ)

## சம்மேளனம் அமைப்பு

வலிகாமம் மேற்கு, ஏப். 9

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம முன்னேற்றச் சங்கங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து அண்மையில் சம்மேளனம் அமைக்கப்பட்டது.

பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா தலைமையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பணக்கூட்டத்தில், பிரதேச செயலர் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளமையினால் நிதி ஒதுக்கீடு செய்யும்போது கிராம முன்னேற்றச் சங்கங்களிடமிருந்து வேலைத் திட்டங்கள் பெறப்பட்டு நிதி ஒதுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். (ஒ-175)


# NEW SCIENCE ACADEMY

மத்திய மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி.

## A/L - 96
### கணித / உயிரியல் வகுப்புகள்

இரசாயனவியல் — திரு. சண்முகசுந்தரம் B. Sc. (Hons) Dip - in - Ed.
பௌதிகவியல் — திரு. S. J. சுரேஸ் B Sc. (Eng.)
தாவரவியல் — திரு. V. S. குணசீலன் B. Sc. (Speciel)
விலங்கியல் — திரு. சண்முகநாதன் B. Sc. (Hons)
தூய/பிரயோக கணிதம் — திரு. P. வெக்டர் வேலாயுதம் B. Sc.

ஆரம்பம்: 10 - 04 - 1994
ஞாயிறு 4-30 மணி

(80809)



# BITSMANS
## கல்வி நிறுவனம்

மானிப்பாய்

## 94 O/L
### DAY CLASS

எமது திறமையான "Super Grade" ஆசிரிய குழுவினால்

✲ விஞ்ஞானம் — ஜே. ஆர். சூரி
✲ கணிதம் — இரா. அருட்செல்வம்
✲ தமிழ் — என். பாலா
✲ சமூகக்கல்வியும் வரலாறும் — என். ராஜன் கணேஷ்
✲ ஆங்கிலம் — எம். ஏ. ஹரி
✲ வர்த்தகம் — என். ராஜன்
✲ இந்துசமயம் — தர்மா
✲ விவசாயம் — சிவா

ஆரம்பம்: 11 - 04 - 1994
திங்கள் காலை 8மணி

(விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்)

[இ-7804]



# A/L 96
## கணக்கியல் வகுப்பு

ஆரம்பம்:
1994-04-25
திங்கள் மாலை 4மணி

★ அனுமதிகளை முன் கூட்டியே பெறவும்.

ஆசிரியர்
D. SAM
76/2, Temple Road,
Jaffna.

(30268)



# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 22 – 06 – 1918
உதிர்வு: 21 – 03 – 1993

## மாணிக்கர் கந்தசாமிப்பிள்ளை
(பிள்ளையார்)

திதி: 09 – 04 – 1994

எங்கள் குடும்ப விளக்காக ஒளிவீசி எம்மை வளர்த்து ஆளாக்கிப் புகழ்பரப்பி இதயத்தில் தெய்வமாக விளங்கி இறைவனடி எய்திய எங்கள் குடும்பத் தலைவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அன்புடன்:
மக்கள், மருமக்கள்,
பேரர்கள்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

(7060)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

7x4, 7x2, 4x5 கனம் உடைய நீளமான றங்கஸ் தேக்குத் தீராந்திகள் உடன் விற்பனைக்குண்டு. கொங் றீற் கற்களும் உண்டு. தொடர்பு: திருமதி ப. கிருஷ்ணன், வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை (வட்டுக்கோட்டை சந்திக்கு அண்மையில்). (7189)

றெக்சின் உறையுடன் Z.P. அமைந்த புதிய தமிழ் பைபிள்கள் சொற்ப பிரதிகள் விற்பனைக்குண்டு. சி. எல். எஸ். புத்தகசாலை, 570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (7487)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பண்டம் முட்டைகள், வான்கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (30190)

சிலிங் சீட், தீராந்தி (பாலை), மரங்கள் விற்பனைக்குண்டு. 46, இராணி வீதி, நல்லூர். (கல்வித் திணைக்களத்திற்கு அருகில்) (30292)

2 போத்தல் பால் எடுக்கும் நல்லின ஆடும் அதன் கடாய் குட்டி இரண்டும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கனகசிங்கம், 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (30300)

பெரிய ஜமுனாபாரி ஆட்டுக்கடாய்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30285)

பாலைமரம் 5''x3''—15அடி நீளம் 10 மரமும், 2''x2''— 10அடி நீளம் 30 மரங்களும் உண்டு. இல. 9A, விதானையார் வீதி, கண்டிக்குளி. (30288)

ஒருகிழமை நிரம்பிய மணித்தாரா குஞ்சுகள் (வெள்ளை தாரா குஞ்சுகள்), நல்லின ஊர்க்கோழி முட்டைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: பவேந்திரன், 28, புதுவீதி அத்தியடி, யாழ்ப்பாணம். (30282)

ஈழத்தமிழர் வரலாறு (கி.பி. 1000 வரை) தொகுதி I கலாநிதி சி. க. சிற்றம்பலம், யாழ். பல்கலைக்கழகம் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-7467)

நல்ல நிலையிலுள்ள Chaly மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 10, இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (பேபி போட்டோ அருகில்) (7198)

இரண்டு பொமனேரியன் ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. ''கோமதி இல்லம்'', பிள்ளையார் கோயிலடி, சித்தன்கேணி. (7200)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பூசி மருந்து கொடுத்த 6 கிழமை Golden Comet சிவப்புபேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30284)

Prima Lohmann Broiler குஞ்சுகள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30310)

ஹைலைன் பிறவுண் ஒரு மாதம் வளர்ச்சியடைந்த பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (30316)

## இலகு திருமண சேவை

32 வயது, அவிட்டம், செவ்வாய் 2 பிரான்ஸில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில். Sponsoring செய்து அழைக்கலாம். மணமக்கள் தொடர்புகளுக்கு: ஞாயிறு, செவ்வாய் காலையும், புதன் மாலையும். து. விமலா, இலகு திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோயிலடி. (30303)

## தவறிவிட்டது

6-4-94 அன்று காலை புன்னாலைக்கட்டுவனுக்கும்—கோண்டாவிலுக்கும் இடையில் அடையாள அட்டை ஒன்று தவறிவிட்டது. இல. (521211482 V) அதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். மே/பா 28, உதயன், சேவை நிலையம், K. K. S. றோட், சுன்னாகம். (7061)

6-4-94 அன்று கிளாலிக்கும், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கும் இடையில் நீலநிற Travelling bag தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், தயவுசெய்து அனுப்பி வைக்கவும். சோ. லிங்கேஸ்வரி, செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பு அல்லது கலைவாணி நகை மாளிகை, இல; 111B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். (30287)

## மணமகன் தேவை

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் வசிக்கும் 28 வயது, மிருகசீரிடம் 1, B. Sc. செவ்வாய் தோஷமற்ற அழகிய பெண்ணுக்கு பட்டதாரி அல்லது தகுந்த மணமகன் கனடாவில் அல்லது இலங்கையில் தேவை. வெளிநாட்டு, உள்நாட்டு மணமக்களுக்கு தொடர்பு கொள்ளவும். Rajenthiram, Rtd. Accountant Kopay, South, (Near Navalar School), Kopay. (30308)

## இறைச்சிக் கோழிகள்

இறைச்சிக்கோழிகள் காலை 7-00—11-00 வரை சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் எங்கள் பெயர்ப்பலகை கண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30286)

## தேவை

தேவன்ஸ் தயாரிப்புகளை தயார் செய்வதற்கு பெண் பிள்ளைகளும், தயாரிப்புகளை விற்பனை செய்ய சைக்கிள் விற்பனையாளரும் தேவை. தேவன்ஸ் உற்பத்தியாளர், 237/8, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (7197)

நல்ல நிலையில் உள்ள 4 K. W. டைனமோ தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு: றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் ஹவுஸ், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7813)

## வாழ்த்து மடல்கள்

பிறந்த நாள் வாழ்த்து மடல் தொகையாகவும், சில்லறை விலைக்கும் மற்றும் திருமண வாழ்த்து அடிப்பதற்கும் தொகையாக பெறுவதற்கு மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம், நல்லூர். (சி-7477)

## SUNRISE குளிர்பானம்

Sunrise குளிர்பானங்கள், சோடியக்கள் சுத்தமானவை, சுவையானவை, பருகிக் களிப்படைவீர். 300ML, 625ML வெறும் போத்தல்கள் நியாயமான விலையில் வாங்கப்படும். தயாரிப்பு விநியோகம் சிவா இன்டஸ்றீஸ், 35/3, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-7810)

## SPECIAL ENGLISH

English Grammar With Spoken English சகல பரீட்சைகளுக்கு ஏற்றவாறும் ஆங்கிலம் பேசக்கூடிய வகையிலும் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. V. N. Kanda samy, Inter (London) A. I. B. Part I (London) Dip- in-English 87. திருநெல்வேலி றோட், (ரயில் கடவைக்கு அண்மையில்) கொக்குவில். (7301)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## O/L

**DAY CLASSES** 8-30 — 2-00
ஆரம்பம் 11 — 04 — 94
8-30 மணி

**EVENING CLASSES** 3-15 — 6-10
ஆரம்பம் 11 — 04 — 94
3-15 மணி

**SAT, SUN, CLASSES** 8-00 — 2-00
ஆரம்பம் 10 — 04 — 94
8-00 மணி

- மாதாந்த பரீட்சை நடத்தப்படும்
- கடமை கட்டுப்பாட்டுடன் நடத்தப் டும்.
- அனுமதிகளை முன் கூட்டியே பெற் க்கொள்ளப் பட வேண்டும்.
- எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.

(சி-7495)

# O/L

## DAY CLASS

ஆரம்பம்: 11 - 04 - 1994
காலை 8-30 மணி

NATURE — ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
UNIVERSAL — கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.

★ பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள் (சி-7481)

# 'A' LEVEL CENTRE

1ஆம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 96

கணித, விஞ்ஞான வகுப்புகள்

ஆரம்பம்: 16 - 04 - 1994
SAT & SUN

| | |
|---|---|
| இரசாயனவியல் | — திரு. நாகரத்ணம் B. Sc. |
| பௌதீகவியல் | — திரு. ஜெயசீலன் B. Sc. |
| தூய பிரயோக கணிதம் | — திரு. நித்தியானந்தன் B. Sc. |
| தாவரவியல் | — திருமதி சுரேந்திரன் B Sc. |
| விலங்கியல் | — திரு. ஞானேந்திரன் Dip Sc. |

பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். [சி-7802]

# கீன் கல்வி நிலையம்

*******

திருநெல்வேலி

## A/L 96 கலை வர்த்தகம்

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. வரதராஜன் |
| அளவையியல் | — திரு. S. S. மனோகரன் |
| வர்த்தகம் | — திரு. வரதன் |
| கணக்கியல் | — திரு. சௌந்தி |
| இந்துநாகரிகம் | — திரு. சிவமகாலிங்கம் |
| தமிழ் | — திரு. பாலா |
| அரசியல் | — திரு. கிருஷ்ணகுமார் |
| புவியியல் | — பிரபல ஆசிரியர் |

ஆரம்பம்: 09 - 04 - 1994
சனி 11. 00 மணி

(சி-7808)

அப்பாடா என்ன வெய்யில்.....!
கொக்காகோலா இல்லாததன் அருமை
இப்போது தான் தெரிகிறது.

**கவலையை விடுங்கள்**

இதோ உங்கள்
கவலையைப் போக்க

# ★ பொப்கோலா ★

வந்து விட்டது

- உலகப்புகழ் பெற்ற கோலா சுவையோடு
- பொருத்தமாக்கப்பட்ட உயர் தொழில்நுட்ப முறையோடு
- உரிய அளவு காற்றூட்டத்தோடு
- சௌகரியமான விலையில்......

பெற்றுக் கொள்ளுங்கள்

ஏக விநியோகஸ்தர்: **வாமாஸ்**
121/2, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7641)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## மறைமுகமான தடை இது!

தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் விமான மூலம் வடபகுதிக்கு வருவதற்கு அரச படையினர் கட்டுப்பாடுகளை விதித்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடபகுதி மக்கள் இன்றுள்ள இன்னலுற்ற நிலையில், அரசாங்கமே தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் நடத்தி, பலவித கஷ்டங்களையும், துன்பங்களையும் கொடுக்கின்ற வேளையில்—

அவர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டி, உதவும் பணியில் உள்ளூர் தொண்டர் நிறுவனங்களும், சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் பெரும் பங்காற்றி வருகின்றன. அரசாங்கம் உதவுவதற்கு பின்னடிப்பதாலும், மனம் விரும்பி அதற்கான செயற்பாடுகளில் ஈடுபடாமையாலும் மக்களின் இன்னல்களைத் துடைப்பதில் தொண்டர் நிறுவனங்களே முன்னின்று உழைக்கின்றன.

வடபகுதி மக்களுக்கு இவ்வாறு பெரும் உதவி செய்து வரும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதான அலுவலகங்களும், உள்ளூர்த் தொண்டர் நிறுவனங்களுக்கு நிதி உதவி மற்றும் பொருள் உதவிசெய்யும் அமைப்புகளின் பிரதான அலுவலகங்களும் கொழும்பிலேயே அமைந்துள்ளன. அத்தகைய பிரதான அலுவலகங்களில் பணிபுரியும் உயர் அதிகாரிகளில் பலரும் வெளிநாட்டவர்கள்.

தங்கள் தொண்டர் நிறுவனம் வழங்கும் உதவிகள் சரியான முறையில், உரியவர்களுக்குச் சென்றடைகின்றனவா? செய்திட்டங்கள் தாம் வகுத்த இலக்கை ஈட்டுகின்றனவா?— என்பதை எல்லாம் அறிவதற்கு மேற்குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு உரிமை உண்டு. தமது திட்டத்தின் அல்லது உதவியின் பெறுபேற்றை, மக்கள் பெற்ற பயனை நேரில் கண்டறியவே அவர்கள் எப்போதும் பெரிதும் விரும்புவதுண்டு;

அந்த வகையில் தொண்டர் நிறுவன உயர் அதிகாரிகள் அடிக்கடி வடபகுதிக்கு வர வேண்டிய தேவை உண்டு. அது தவிர்க்கமுடியாததும் ஆகும்.

ஆனால் அவர்கள் தரை வழிப் பயணம் மேற்கொண்டு வடபகுதிக்கு அடிக்கடி வந்து செல்வது என்பது இலகுவான காரியமாகும். அரசாங்கம் விதித்துள்ள போக்குவரத்துத் தடையினால், இந்த நாட்டு மக்களே வடபகுதிக்கும் கொழும்புக்கும் இடையில் இலகுவாகப் பயணம் செய்ய முடியவில்லை. தரைப் பயணத்தின் சிரமங்கள், கஷ்டங்களால், முக்கிய அலுவல்களுக்குக் கூட கொழும்பு சென்று வர பலரும் பின்னடிக்க வேண்டியுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் உயர் அதிகாரிகளாக உள்ள வெளிநாட்டவர்கள் வடபகுதிக்கு தரை வழியாகப் பயணம் செய்ய எப்படி விரும்புவர்? அவர்களின் பயணத்துக்குக் கட்டுப்பாடு விதிப்பது என்பது வடபகுதி மக்களுக்கு தொண்டர் நிறுவனங்கள் வழங்கும் உதவிகளுக்குத் தடைவிதிப்பதற்குச் சமமாகும்.

தமிழர்களுக்கு எல்லாவித நெருக்குதல்களையும், அழுத்தங்களையும், கஷ்டங்களையும் கொடுத்தும், இழப்புகளை உண்டாக்கியும், அவர்களை உடல், உள ரீதியாகப் பலவீனப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம். சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் தமிழர்களுக்கு மனித நேயத்தின் பால் வழங்கும் உதவிகள் அரசின் அந்த நோக்கத்திற்குக் குந்தகம் விளைவிப்பதாக உள்ளதாக அரசு கருதுகிறது.

அதனை மனதிற்கொண்டே தொண்டர் நிறுவன அதிகாரிகள் வடபகுதி வருவதற்கு கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. இது தமிழர்களுக்கு உதவ வேண்டாம் என்று மறைமுகமாகத் தடை விதிப்பதற்கு ஒப்பானதாகும். பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை, வாழ்வியக்கத் தடை ஆகியவற்றுடன் தொண்டர் நிறுவன உதவித் தடையும் புதிதாகப் பிறப்பிக்கப்படுகிறது.

எதிர்வரும்தேர்தல்களுக்கு முன்னோடியாக

# எதிரணிகள் பலத்தைகாட்ட கூட்டாக மேதினக்கூட்டம்

## சிறிமா தலைமையில் நடக்கும்

கொழும்பு, ஏப். 9
எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு முன்னோடியாக— தமது பலத்தை எடுத்துக் காட்டும் ஒரு நிகழ்வாக எதிர்வரும் மேதினக் கூட்டத்தைக் கொழும்பில் நடத்துவதற்கு சுதந்திரக்கட்சி தலைமையிலான பொது மக்கள் ஐக்கிய முன்னணி தயாராகி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இம்மேதினக் கூட்டம் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் கம்பல் பூங்காவில் நடத்தப் படவுள்ளது.

எதிர்க்கட்சிகள் கூட்டாக நடத்தும் மேதினக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு விரோதமான சக்திகள் அனைத்தையும் கலந்து கொள்ளும்படி பொதுமக்கள் ஐக்கியமுன்னணி அழைப்பு விடுத்திருக்கிறது.

இம்மேதினக் கூட்டத்தில் டக்ளஸ் ஐக்கிய முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஒரு பிரிவு ஆகியனவும் கலந்து கொள்ளவுள்ளன. (ஒ-எ)

## மாணவருக்கு இலவச சீருடை நாணய நிதியம்சீற்றமடையும்

### பி. பி. ஸி. தெரிவிப்பு

பாடசாலை மாணவருக்கு இலவச சீருடை வழங்கப்படும் என்று விஜேதுங்கா நிர்வாகம் மீண்டும் அறிவித்திருப்பது சர்வதேச நாணய நிதியத்துக்கு ஆத்திரத்தை ஏற்படுத்துவது நிச்சயம்.

இப்படி பி. பி. ஸி. தெரிவித்தது.

பிரேமதாசாவின் செலவை கூட்டும் சமூக நலத் திட்டங்களை உடனடியாக நிறுத்த வேண்டும். என்று சர்வதேச நாணய நிதியம் விஜேதுங்க அரசுக்கு நெருக்குதல் கொடுத்து வந்திருக்கிறது.

இப்போது பிரேமாவின் சமூகநலக் கொள்கைகளை மீண்டும் செயற்படுத்த இந்த அரசு முன்வந்துள்ளது. இதன் மூலம் சர்வதேச நாணய நிதியத்துக்கு இந்த அரசு வழங்கிய உறுதி, இத்தேர்தல் ஆண்டில் மறக்கப்படலாம் — என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது. (த எ-6)

## அதிபர்கள் கூட்டம்

கல்வி அபிவிருத்திக் கழக ஆசிரியர்களுக்கான உதவு தொகைக் கொடுப்பனவு மற்றும் மேதின ஒழுங்குகள் சம்பந்தமாக அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளதால்—

பின்வரும் கல்விக் கோட்ட அதிபர்கள்— கோட்டரீதியாக குறிப்பிடப்படும் இடங்களில்— சமூகம் தருமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

கோப்பாய் கல்விக் கோட்டம்: எதிர்வரும் திங்கட்கிழமை மு. ப. 9மணி — நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

சங்கானை கல்விக் கோட்டம்: எதிர்வரும் திங்கட்கிழமை மு. ப. 10 மணி— வட்டு இந்துக்கல்லூரி.

உடுவில் கல்விக் கோட்டம்: எதிர்வரும் திங்கட்கிழமை மு. ப. 11 மணி — இராமநாதன் கல்லூரி.

தென்மராட்சி கல்விக் கோட்டம்: எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 30 மணி— சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

சரவெட்டி கல்விக் கோட்டம்: எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி. ப. 1 மணி - இருதயக்கல்லூரி.

பருத்தித்துறை கல்விக் கோட்டம்: எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி.ப. 2மணி— வேலாயுதம் ம. வி. (ஓ)

அமைச்சர் சிறிசேனகூரே முன்னிலையில்

## டி., பீ., ஜே; ஆர் இருவரையும் பகிரங்கமாக சாடினார் ஒஸி

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் சிரேஷ்ட அமைச்சருமான சிறிசேன கூரேயின் முன்னிலையில் தற்போதைய ஜனாதிபதி விஜேதுங்கா மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஆகியோரை ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் ஒஸி அபயகுணசேகரா நிந்தித்துப் பேசினார் என்று அறிவிக்கப்படுகிறது:

ஐக்கிய தேசியக் கட்சியில் கொள்கைப் பிடிப்புள்ள தலைவர்கள் இருவரே இருந்தனர் என்றும் — அவர்கள் நாட்டின் முதலாவது பிரதமரான டி. எஸ். சேனநாயக்காவும் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவும் மட்டுமே என்றும் திரு: ஒஸி அபயகுணசேகரா அப்போது கூறினார்.

மக்கள் ஆதரவே இல்லாத ஒஸி அபயகுணசேகரா, ஜனாதிபதி விஜேதுங்காவைத் தாக்கிப் பேசிய போது, அமைச்சர் சிறிசேன கூரே, அக்கூட்டத்தில் பார்வையாளர்களில் ஒருவராக அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார் என்றும் —

இச்சம்பவம் ஐக்கிய தேசியக் கட்சியின் உட்கட்சிப் பூசலின் தீவிரத்தை எடுத்துக் காட்டுவதாக உள்ளது என்றும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (த-எ-6)

கடனைச் செலுத்த தாமதிக்கும்

## விவசாயிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை இல்லை

கடனைத் திருப்பிச் செலுத்துவதைத் தாமதிக்கும் விவசாயிகளுக்கு எதிராக வங்கிகள் சட்ட நடவடிக்கை எடுப்பதை அரசாங்கம் இடைநிறுத்தி வைத்துள்ளது.

இத்தகவலை விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித் துறை அமைச்சர் திரு. தர்மதாஸ பண்டா நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

விவசாயிகள் இந்த கடனை திருப்பிச் செலுத்தாததற்கான காரணத்தை அறிந்து நிவாரணத்தை வழங்குவது பற்றி ஆராயவென குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இக்குழுவின் சிபாரிசுகள் அமுல் செய்யப்படும். நிவாரணம் பெறுவதற்காக விவசாயிகள் இக்குழுவிடம் முறைப்பாடு செய்ய வேண்டும்.

முன்பு பெற்ற கடனை திரும்பச் செலுத்துவதற்கான அவகாசம் வழங்கப்படுவதுடன் விவசாயிகளுக்கு தேவையான உதவியும் வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஓ-எ)

## சுதந்திரகட்சி வாக்குகளை எவரும் உடைக்க முடியாது

### இப்படிச் சொல்கிறார் அனுரா

கொழும்பு, ஏப். 9
திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தாலும் கூட சுதந்திரக்கட்சியின் வாக்குகளை உடைக்க முடியாது.

உயர்கல்வி அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா (லங்காதீப) பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென்மாகாணசபைத் தேர்தலில் சிறுபான்மை இனத்தவரின் வாக்குகள் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கே கிடைத்தன.

சிறுபான்மை இனத்தவரின் வாக்குகள் ஏன் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைக்கவில்லை என்று அவரிடம் கேட்கப்பட்டபோது அவர்—

இந்தக் கேள்வியை என்னிடம் கேட்காதீர். சிறுபான்மை இனத்தவரின் நம்பிக்கையை நாம் வெல்ல வேண்டும். சிறுபான்மையினத்தவர்களின் வாக்குகள் ஐக்கியதேசியக் கட்சிக்கு உரியவை முஸ்லிம்களின் 90சதவீதமானோர் யு.என்.பி. ஆதரவாளர்கள். பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக் கூட்டங்களுக்கு மக்கள் அலை அலையாக வந்தார்கள் வேடிக்கை பார்ப்பதற்காக மட்டுமே என்றார்.

## லங்கா சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஏப். 9
லங்கா சிமெந்து நிறுவனத்தின் மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய சம்பளமும் —

புதுவருட முற்பணமும் — இன்று சனிக்கிழமை மட்டும் காலை 8-30 மணி முதல் வர்த்தக வங்கி யாழ். கிளையில் வைத்து வழங்கப்படும் என்று நிறுவனத்தின் கணக்காளர் திரு. சி. பாலசிங்கம் அறிவித்துள்ளார். (இ-45)

## ஆலயங்களில்

சங்கானை, மாவடி ஞானவைரவர் ஆலயத்தில் 7 ஆம் நாள் திருவிழாவாகிய இன்று இரவு 8.30 மணிக்கு கம்பன் கழகப் பேச்சாளர் திரு. ஆறு. திருமுருகனின் பெரிய புராணத் தொடர் விரிவுரையும் அதனைத் தொடர்ந்து இரவு 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்கும் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களுக்குமிடையே பட்டிமன்றம் ஒன்றும் இடம்பெறும்.

## புலிகளின் குரல் வானொலியில்

09-04-1994
சனி இரவு

- ★ 8-01 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — ''போர்க்களத்துப் பூவான அன்னை பூபதி''
- ★ 8-10 — அறிவியற் கலசம்
- ★ 8-25 — நேயர் கடிதங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — சித்திரம் - 'தமிழீழக் குழந்தைகள்'

10-04-1994
ஞாயிறு காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — ''பூபதியின் தியாகம் புதுமையானது''
- ★ 7-25 — களத்தில் மலர்ந்தவை
- ★ 7-45 — செய்திகள்
- ★ 7-50 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-55 — தாயகப் பாடல்

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 9
அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட பவளவிழாவையொட்டிய— வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று பி. ப 4. 30 மணிக்கு அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

ஆட்டத்தில் மோதும் கழகங்கள் வருமாறு: —

★ அரியாலை ஐக்கிய கழக 'ஏ' அணி எதிர் அரியாலை ஐக்கிய கழக 'பி' அணி

### 3 படையினர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இத்தாக்குதலில் ரி 56, 2 ரக துப்பாக்கிகள் இரண்டும், ரி56 1 ரக துப்பாக்கி ஒன்றும், ஏ. கே. ரக ரவைக்கூடு தாங்கி அணிகள் நான்கும், ஏ. கே. ரக ரவைக்கூடுகள் பதினைந்தும், நடுத்தர ரவைகள் [illegible] விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-3)

### ஐ. சே. க. பெரு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
விடுதலைப் புலிகளுடன் யுத்தம் நடத்தி முன் நிலையில் நின்று தேர்தல் நடத்துவது.

சமாதானத்துக்கு சிங்கள அரசு வந்தால் நேசக்கரம் நீட்டி அவர்களை அரவணைக்க விடுதலைப் புலிகள் தயார்.

எம்முடன் சண்டைக்கு வந்தால் காதைப் பொத்தி அடிப்போம். இரண்டுக்கும் நாம் தயார்.

## மேற்கு நாடுகள் நினைத்தால் திருப்பத்தை ஏற்படுத்தலாம்

'மேற்குலகம் நினைத்தால் இங்கு பெரிய திருப்பத்தை ஏற்படுத்தலாம். ஒரு பெரிய திருப்பம் ஏற்படும் என்றால், அது மேற்குலகத்தால் தான் முடியும். அதை அவர்கள் செய்யவேண்டும். அந்தக் காலம் வந்திருக்கிறது.

எமது பிரச்சினைக்கு தீர்வு காண, மத்தியஸ்தம் வகிக்க மேலைநாடுகள் பல தயாராக இருக்கின்றன:

கனடா, ஆஸ்திரேலியா, சுவிஸ்சர்லாந்து அரசுகள் மத்தியஸ்தம் செய்ய தயாராக இருப்பதாக எமக்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் கடிதம் அனுப்பின. வெளிநாட்டில் பேச்சுக்களை நடத்தலாம் என்றும் அந்த நாட்டு அரசுகள் தெரிவித்தன.

அந்த அரசுகளின் முயற்சிகளுக்கு நாம் தயார் என்று வாக்குறுதி அளித்தோம்.

ஆனால் ஸ்ரீலங்கா அரசோ, இது உள்நாட்டுப் பிரச்சினை இதை தீர்க்க வெளிநாடு தேவையில்லை என்று கூறி விட்டது.

## சபாநாயகரின் யாழ். விஜயம் தடுக்கப்பட்டதன் அர்த்தம்என்ன?

இரண்டாம் ஈழப் போர் ஆரம்பித்த பின்னர் விடுதலைப் புலிகள் ''சமாதானக் கதவு திறந்துள்ளது. பேச்சுக்கு யார்'' என்று கூறிவருகின்றனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் ஸ்ரீலங்காவில் இருந்து எத்தனைபேர் இங்கு வந்து திரும்பினார்கள்.

ஆயர்கள் வந்தார்கள், பிக்குமார் வந்தார்கள், அரச சார்பற்ற அமைப்புப் பிரதிநிதிகள் வந்தார்கள். பத்திரிகையாளர்கள் வந்தார்கள். ராஜதந்திரிகள் வந்தார்கள்.

சமாதான யோசனைகளுடன் சமாதானம் பேசவந்தார்கள். அவர்களை எல்லாம் நேசக்கரம் நீட்டி அரவணைத்தோம்.

''விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கு தயார். போர் நிறுத்தத்துக்கும், பேச்சுக்கள் மூலம் சமாதானத் தீர்வு காண்பதற்கும் தயார்'' என்று அவர்களிடம் கூறினோம்.

எமது நிலைப்பாட்டை சிங்கள அரசுக்கு சொல்லுங்கள் என்றும் அவர்களிடம் தெரிவித்தோம்.

அவர்கள் எத்தனை தடவை வந்தும் என்ன பயன்? அவர்களை சந்திக்கவே ஸ்ரீலங்கா அரசு மறுக்கிறது.

மக்களின் கஷ்டங்களை — இரத்தம் சிந்தும் கண்ணீர்க் கதைகளை — மக்களின் சமாதான விருப்பங்களை - சிங்கள அரசுக்கு அவர்கள் தெரிவிப்பார்கள் என்பதால் அவர்களைச் சந்திக்க அரசு விரும்பவில்லை.

கடைசியாக சபாநாயகர் முஹம்மது வரப்போறதாக அறிவித்தார். வாருங்கள் என்று அறிவித்தோம். அரசின் பிரதிநிதியாகவோ, ஜனாதிபதியின் பிரதிநிதியாகவோ, சிங்கள, முஸ்லிம் மக்களின் தலைவராகவோ எந்தத் தோரணையிலும் வாருங்கள்:

வரும் போது முஸ்லிம் மக்களைப்பற்றியும் பேசலாம் என்றும் அவருக்கு அறிவித்தோம்:

மனித உரிமைகள் சபைத் தலைவரையும் கூட்டி வரப் போகிறேன் என்றார். அவரையும் கூட்டிவாருங்கள் என்றோம்.

வரப்போவதாக தந்தி அடித்தார். ஹெலியில் வரப்போவதாகக் கூறினார். பலகைக் கழக முன்றலில் ஹெலியில் வந்து இறங்கலாம் என்றோம்.

''கடைசி நேரத்தில் ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு போகமுடியாது என்று கூறி தன்னை ஏமாற்றிவிட்டார் அதனால் கவலையுடன் இருக்கிறேன்'' என்று எமக்கு அறிவித்தார்.

இப்போது யார் சமாதானத்தை விரும்புகிறார்கள், யார் விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா? — என்று கேட்டார். (இ-3)

### கல்வி உட்பட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மில்லாதவாறு பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது.

எதிரியின் பாரிய அழிப்பு வேலைகளுக்கு மத்தியில், எமது விடுதலை இயக்கமானது, தனது சக்திக்கு உட்பட்டதாக, சில ஆக்கவேலைகளைச் செய்து வருகிறது. பெரியதொரு போருக்கு முகங்கொடுத்தவாறு, சமூக மேம்பாட்டிற்காக உழைப்பதில் பல இடர்ப்பாடுகள் இருக்கவே செய்யும். விடுதலை வேண்டிப் போராடும் இனங்கள் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வது இயல்பு.

எமது தேசம் விடுதலை பெற்று, நிலையான அமைதியும், உறுதியான அரசும், தோன்றும்பொழுதுதான், நாம் எமது சமூகப் பொருண்மிய வாழ்வை உயர்ந்தபடி நிலைக்குக் கட்டி எழுப்புவது சாத்தியமாகும். அப்பொழுது தான் கல்வித்துறையையும் சீரான முறையில் சீரமைத்து எமது நாட்டின் நலன்பேணும் வகையில் மேம்பாடு செய்ய முடியும், தேசிய கல்வித்திட்டம் ஒன்றைச் செயற்படுத்த முடியும்; அறிவியல் தொழில் நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து, எமது நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்ல முடியும்

எமது சமூகத்தின் ஒட்டு மொத்தமான விடிவிற்கும், விமோசனத்திற்கும், தேசிய விடுதலை அத்தியாவசியமானது என்பதை நான் வலியுறுத்தத் தேவையில்லை. கல்வி உட்பட சகல சமூக அமைப்புகளையும் ஓர் உன்னதமான வளர்ச்சிப் போக்கில் உயர் நிலைக்கு நகர்த்திச் செல்வதாயின், நாம் சுதந்திர மனிதர்களாக, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருக்கவேண்டும். இதனால் தான் தேசிய விடுதலையை எமது பிரதான இலட்சியமாக வரித்துக்கொண்டு நாம் போராடுகிறோம்.

#### போராட்டத்தின் நோக்கை மாணவர் புரிந்து கொள்ள வேண்டும்

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் உயரிய நோக்குகளையும், இலக்குகளையும் மாணவ சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் புரிந்துணர்வை வளர்த்து மாணவரிடையே தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்த, ஆசிரிய சமூகம் முயற்சிக்கவேண்டும் தேசவிடுதலை என்பது, எல்லோரது விடுதலையையும், விடிவையும் குறித்து நிற்கும் ஒரு பொதுவான குறிக்கோள் ஒரு தேசிய இலட்சியம் இந்த இலட்சியத்தில் எல்லோரும் பற்றுக்கொள்ளும் பொழுதுதான் தமிழரின் சுதந்திர இயக்கம் வலுமிக்க சக்தியாக உருப்பெறும்.

இன்று நாம் ஒரு போர்ச் சூழலில் வாழ்கிறோம்; இந்தப் போர்ச் சூழலில், எமதுதேசிய வாழ்விற்கும், வளத்திற்கும், அடித்தளமான சமூக நிறுவனங்கள், சிதைந்து போகாமல் பாதுகாப்பது எமதுமுதன்மையான பணியாக இருக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு, எமது விடுதலை இயக்கம் ஆக்கபூர்வமான செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. குறிப்பாக, கல்வித்துறையின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்குமாக நாம் உருப்படியான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் 1992 இல் தொடங்கப்பட்ட தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு, இம் முறையும் சிறப்புற நடைபெற்றுள்ளதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தேர்வுக்காகப் பல்வேறு வகைகளிலும் உழைத்த அனைவரையும் பாராட்டுவதோடு, இத்தேர்வில் தேசிய, கோட்ட மட்டங்களில் உச்சப்பெறுபேறுகளைப்பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்குவதில் மட்டற்ற மகிழ்வு கொள்கிறேன்

—இவ்வாறு தலைவர் தமது செய்தியில் தெரிவித்தார். (அ)

### சிறப்பாக--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திருமதி இராமநாதன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி ஆகியோர் உரையாற்றினர்.

தமிழீழ தேசியத் தலைவரின் சிறப்புப்பரிசில்களை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு: கரிகாலனும் —

ஏனைய பரிசில்களை செல்வி திலகவதி பெரியதம்பி, திரு. இ. சிவானந்தன் ஆகியோரும்-

தமிழ்ப்பாட அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை பேராசிரியர் கே. குணரத்தினமும் — வழங்கினார்கள். (இ-3)

PERSONAL
NEW
SCIENCE
CENTRE
எழிலகம் முன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

A/L 96

PURE/ APP.
திரு குணசிங்கம்
B Sc (Hons)

ZOO;
திரு ஈஸ்வரதாசன்
B Sc.(Cey) Dip in Ed

PHY:
திரு ரவீந்திரநாதன்
B Sc.(Cey) Dip in Ed

CHE:
திரு செல்வா
B Sc (Hons)

BOT:
திரு பாலா

ஆரம்பம்:
9.04.94
சனி

[ஒ/7720]

குகன் கல்வி நிறுவனம்
ஆவரங்கால்

A/L 96 கலை, வர்த்தகம்

9-04-94 சனி பி.ப. 4.30 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | கலாகரன் / லோகசிங்கம் |
| கணக்கியல் | — | அருளானந்தம் |
| வர்த்தகம் | — | சோதிலிங்கம் |
| அளவையியல் | — | விக்கி |
| இந்துநாகரிகம் | — | ஜோதீஸ்பரன் |
| தமிழ் | — | சிவலிங்கம் |
| வரலாறு | — | சுரேந்தினி |
| புவியியல் | — | கந்தசாமி |

[30325]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார்
# கோவில்
## செயலகப் பொறுப்பாளர் பதவி (ஆண்)

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. விண்ணப்பதாரர் க. பொ. த. (சா/த) சித்தி யடைந்தவராகவும் அரச அல்லது தனியார் நிறுவனத் தில் கடமை புரிந்து 10 வருடங்களுக்கு மேல் அனுப வம் பெற்றவராகவும் வரவு செலவுக் கணக்குகள் செய் வதில் அநுபவம் உடையவராகவும், ஆசார சீலராகவும் ஆலயச் சூழலில் ஒரு மைலுக்கிடையில் வசிப்பவராக வும் தொண்டு மனப்பான்மையுடன் கடமை புரியக் கூடியவராகவும் பொது மக்களுடன் அன்பாகப் பழகக் கூடியவராகவும் 40 55 வயதுக்கு இடைப்பட்டவராக வும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்துடன் 17-04-94 காலை 10.00 மணிக்கு ஆலயக் காரியாலயத்தில் சமுகமளிக்கவும். கடமை விவ ரங்களும் வேதனமும் நேரில் பேசிக்கொள்ளப்படும்.

இங்ஙனம்,
செயலாளர்,
தர்மகர்த்தாக்கள் சபை.

(7063)

---

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## O/L 1994 DEC.
## DAY CLASS

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
11 - 04 - 1994

| | |
|---|---|
| விஞ்ஞானம் | திரு. இரா. செல்வவடிவேல்<br>திரு. S. வாமன் |
| கணிதம் | திரு. இரா. அருட்செல்வம்<br>திரு. K. குணசிங்கம் |
| வரலாறும் சமூகக்கல்வியும் | திரு. K. S. முத்துலிங்கம் |
| ஆங்கிலம் | திரு. தெய்வபாலன் |
| தமிழ், சமயம் | திரு. தமிழ்நம்பி |
| வர்த்தகம் | திரு. அருண் |

★ வாரத்தில் நான்கு வகுப்புகள்
★ முழுப்பாடத் திட்டமும் பூர்த்தியாக்கப்படும்

[சி-7814]

---

# NEPTUNES COLLEGE
KARAVEDDI

## A/L 96

கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்:
11-04-94
மாலை 4.00 மணி

O/L துரித மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்:
10-04-1994
காலை 10.00 மணி

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.

நிர்வாகி

[30322]

---

# புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.

## O/L DAY CLASSES

பகல் நேர வகுப்புக்கள்
ஆரம்பம்:
11 - 04 - 1994
திங்கள் காலை 8 மணி
(வகுப்புக்கள் 4 நாட்கள் நடைபெறும்)

(இ-7701)

---

# "வெள்ளி விழா" ஆண்டில்
# BOND கல்வி நிறுவனம் யாழ்ப்பாணம்

1969 ஆம் ஆண்டு முதல் தன்னிகரற்ற சேவையில்
தனியார் கல்வி நிறுவனங்களின் முன்னோடிகள்

**A/L 96**
விஞ்ஞானம்
கணிதம்
வர்த்தகம்
கலைப் பிரிவுகள்
ஆரம்பம்:
16 - 04 - 1994

**O/L 1994**
DAY CLASS
11-04-94
பாடசாலை மாணவர்களுக்கான மாலை நேர சனி, ஞாயிறு வகுப்புகள்
11 - 04 - 1994

3, 4, 5, 6, 7, 8, 9, 10ஆம் ஆண்டுகள்
TYPING
SHORT - HAND
SPOKEN ENGLISH
வகுப்புக்களும்
12 - 04 - 1994

அனைத்துப் பாடங்களுக்குமான மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளுடன்

* மாணவர்களின் கட்புலன், செவிப்புலன்களைக் கருத்திற் கொண்டும் A/L, O/L வகுப்புக்களுக்கு 60 மாணவர்களும் 3,4,5,6,7,8,9,10 ஆம் ஆண்டு வகுப்புக்களுக்கு 35 மாணவர்களும் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

(இ/7722)

---

ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி நிதிக்காக
# 'ராசி சில்க்ஸ்'
ஆதரவில்
## மின்னொளியில் மிளிரும்
## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி - 1994

இடம்:- பரி. யோவான் கல்லூரி மைதானம்
காலம்:- 09-04-1994 இரவு 7 மணி
சிறப்பு விருந்தினர்:- திரு. க. பரமேஸ்வரன் [பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்]

பங்குபெறும் அணிகள்;
அம்பாள் வி. க. எதிர் சென். அன்ரனீஸ் வி. க.
பல்கலைக்கழக வி. க. எதிர் மாவத்தை வி. க.

பிரவேசம்:- ரூபா 25/-

[இ/7702]

---

தென்மராட்சியில்.........
# பிறிலியன்ற் கல்வி நிலையம்
சாவகச்சேரி

பாடசாலை செல்லாத O/L மாணவர்களுக்கான
## பகல்நேர வகுப்புக்கள் ஆரம்பம்

| | |
|---|---|
| கணிதம் | விமல், செந்தில் |
| விஞ்ஞானம் | மகேந்திரன், பிறேம், விமல் |
| தமிழ் | தர்மராஜா, சுதாகரன் |
| சமூகக்கல்வி | தவீந்திரன் |
| ஆங்கிலம் | பிரபல ஆசிரியர் |
| வர்த்தகம் | பாலன் |

ஆரம்பம்: 12 - 04 - 1994
(8-00 a. m. செவ்வாய்)

குறிப்பு:
சகல பாடங்களும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.

(30320)

---

# I.A.S. ஆவரங்கால்
## கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்: இன்று 09 - 04 - 1994
சனி 4மணி

| | |
|---|---|
| பொருளியல் | R. இராஜேஷ் |
| கணக்கியல் | A.S.A. கலைச்செல்வன் |
| வர்த்தகம் | சிவப்பிரகாசம் |
| அளவையியல் | ஜெயராஜ் |
| புவியியல் | பிரபாகரன் |
| தமிழ் இந்து சமயம் | கோப்பாய் சிவம் |
| இந்துநாகரிகம் | ஸ்ரீ |
| வரலாறு | ஸ்ரீகரன் |
| நாடகமும் அரங்கியலும் | சத்தியா |

## O/L DAY CLASS
ஆரம்பம் 09-04-1994 இன்று
சனி காலை 9மணி

(30319)

---

# எடிசன் அக்கடமி

யாழ்: இந்து அருகில்
411/1
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கொக்குவில் இந்து அருகில்
27
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

எமது இரு நிறுவனத்திலும்
## O/L DAY CLASS
ஆரம்பம்; 12-04-1994
செவ்வாய் 8மணி

★ எமது வழமையான யாழ். பிரபல ஆசிரியர் குழு
★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளலாம்.

[சி-7707]

---

# மரண அறிவித்தல்கள்

## நடராசா சிவகுமார்

காரைநகர் மொந்திபுலத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி ஆனந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவகுமார் 7-4-94 இல் கிளி நொச்சியில் அகால மரணமானார்.

இவர் பாமதியின் அன்புக் கணவரும், ரதீபன், ரதீபா, ராஜீவ் ஆகியோரின் அன்புத் தந்தையும், நட ராசா [ஓய்வுபெற்ற இ போ.ச நடத்துநர்], இலட்சுமி தம்பதிகளின் மகனும், நயினாதீவைச் சேர்ந்த ஏகாம் பரம், மங்களேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், ந கணேசமூர்த்தி [மெமோரியல் ஆங்கில பாடசாலை மானிப்பாய்], கனகேஸ்வரி, சிவராசா, சிவநேசன் [நில அளவையாளர் திணைக்களம், திருகோணமலை), உதய குமாரன், நந்தகுமார், சிவகௌரி, பாரதி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார் இறுதிக் கிரியைகள் இன்று [9-4-94] கிளிநொச்சியில் நடைபெறும்.

தகவல்:
சோ. க. நடராசா [தந்தை]

சாமி வீதி,
சித்தன்கேணி. [7306]

## திருமதி தங்கத்துரை மோட்சியவதி

திருமதி தங்கத்துரை மோட்சியவதி 07-04-94இல் [illegible]கி விட்டார்.

அன்னார் முன்னை நாள் யாழ். மாநகரசபை சிரேஷ்ட கணக்கியலாளரும், முன்னை நாள் கட்டை வேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்க தலைவருமாகிய திரு. சி. தங்கத்துரையின் அன்பு மனைவியும், செல்வன் த. சரவணபவனின் (இணைந்த பல்கலைக்கழகம், வவு னியா) அன்புத் தாயாருமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (09-04-94) சனிக் கிழமை காலை 10-00 மணியளவில் அவரது இல்லத் திலிருந்து தகனக்கிரியைக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. தங்கத்துரை (கணவர்)

பொன்னர் தோட்டம்,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

[30307]

## பிலிப்புப்பிள்ளை ஆசீர்வாதம்
(செல்லர்)

மாதகல் பற்றிமாவீதியைச் சேர்ந்த பிலிப்புப் பிள்ளை ஆசீர்வாதம் (செல்லர்) 08-04-94 இல் கால மானார்.

இவர் லீலியின் அன்புக் கணவரும் ஜெயமணி, ராசா, நவம் (இந்தியா), வேவி, றோஸ்மலர், தங்க மணி, நவமணி, வவா (ஆசிரியர் சென் தோமஸ் பாட சாலை மாதகல்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல் வநாயகம், செல்வமணி, நிர்மலா, யேசுரத்தினம். அரு மைத்துரை, செல்லத்துரை, அற்புதராசா, தேவறாஜ் (பிரதம தபால் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோ ரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 09-04-94 இன்று காலை 8.30 மணியளவில் புக்கைதின்னிப் பிள்ளையார் கோவி லடி, ஆனைக்கோட்டை இல்லத்திலிருந்து புனித அன் னாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டபின் நல்லடக்கம் செய்யப்ப டும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
ஆ. ராசா (மகன்)

(30328)

---

# சோழன் நெல் அரிசி வாணிபம்

**நாட்டரிசி** கிலோ 27 ரூபா 47 சதப்படி
(67 கிலோ) மூடை 1840/-க்கு மொத்தமாகவும்
**நெல்** (69 கிலோ) மூடை 1275/- மொத்தமாகவும்
**திட்டல் பச்சை**
(67 கிலோ) மூடை 1825/- விலையிலும்
**உடையல் பச்சை**
(67 கிலோ) மூடை 1750/- விலையிலும்
மற்றும் தவிடு நியாய விலையிலும் பெற்றுக்கொள்ள.

# சோழன் நெல் அரிசி வாணிபம்

பலாலி வீதி, திருநெல்வேலி.
கிளை,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

(30327)

---

# விக்னா கல்வி நிறுவனம்

இல: 52. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்
(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவமான ஒரே நிறுவனம்)

## 96 A/L கலை வர்த்தகம்

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல்<br>திரு. க கலாகரன் | வர்த்தகம்<br>திரு தேவா | கணக்கியல்<br>திரு SK பிரபாகரன் |
| அளவையியல்<br>திரு. விக்கி | தமிழ்<br>திரு. குழந்தை | இந்து நாகரிகம்<br>இந்து சமயம்<br>திரு. சாரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல<br>திரு [illegible]ணா சா | அ. சியல்<br>திரு சீலன் | வரலாறு<br>திரு சிறீதரன் |

**சனி, ஞாயிறு வகுப்புகள்**
(வார இறுதி)
ஆரம்பம்:
09-04-1994
காலை 8 மணி

**மாலை நேர வகுப்புகள்**
(கிழமை நாட்களில்)
ஆரம்பம்:
11-04-1994
மாலை 4 மணி

※ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(இ-7492)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 09-04-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org